**Day Long International Workshop (Hybrid Mode) on How to do Quality Research and Publish in Scopus Indexed Journals? held on 5th July, 2023 at Bharathidasan University, Trichy**

**Organiser: Dr. M. SELVAM**

**The New Indian Express, Tiruchirappalli Edition,**
**Dated: 08.07.2023, Page No.: 05**



## Workshop on quality research held at Bharathidasan school of mgmt

Tiruchy: The Department of Commerce and Financial Studies, Bharathidasan School of Management, Directorate of Research and SMART Journal of Business Management Studies organised a day-long international workshop (Hybrid Mode) titled, 'How to do Quality Research and Publish in Scopus Indexed Journals?' on Wednesday at Bharathidasan University. M Selvam, university vice-chancellor, delivered the presidential address. Satya Parayitam, professor of management and marketing at Massachusetts University, USA, lectured on 'Conceptual Model and Theoretical Background', 'Hypotheses Development and Testing', and 'Manuscript Structure for Scopus-Indexed Publications'.

**Dinamalar, Tiruchirappalli Edition,**
**Dated: 08.07.2023, Page No.: 07**

## பல்கலையில் பன்னாட்டு கருத்தரங்கம்



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த "தரமான ஆராய்ச்சிகளை எவ்வாறு மேற்கொள்வது? மற்றும் ஸ்கோபஸ் பட்டியலில் உள்ளடக்கிய ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எவ்வாறு வெளியிடுதல்?" என்ற தலைப்பிலான பன்னாட்டு இணையவழி பயிலரங்கத்தில் துணைவேந்தர் செல்வம், ஸ்மார்ட் இதழ் ஆசிரியர் செல்வம், மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகம் சார்ல்டன் காலேஜ் ஆப் பிசினஸ் பேராசிரியர் சத்ய பராய்தம், வணிகவியல் துறை தலைவர் வனிதா ஆகியோர்.

**திருச்சி, ஜூலை 8–**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறை, மேலாண்மை பள்ளி ஆராய்ச்சி இயக்ககம் மற்றும் ஸ்மார்ட் மேலாண்மை கல்வி இதழ் சார்பில் சமூக அறிவியல் ஆராய்ச்சி நெறியாளர்களின் நன்மைக்காக தரமான ஆராய்ச்சிகளை எவ்வாறு மேற்கொள்வது மற்றும் ஸ்கோபஸ் பட்டியலில் உள்ளடக்கிய ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எவ்வாறு வெளியிடுதல்,என்ற தலைப்பிலான பன்னாட்டு இணையவழி பயிலரங்கம் நடந்தது.

வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை தலைவர் வனிதா வரவேற்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் தலைமை வகித்து பேசுகையில், 'ஆராய்ச்சி என்பது எல்லோரும் பார்த்ததை பார்ப்பதும், யாரும் யோசிக்காததை யோசிப்பதும் ஆகும். ஆராய்ச்சியில் நெறிமுறை வரையறைகளைப் பின்பற்ற வேண்டும்' என்றார். ஸ்மார்ட் மேலாண்மை கல்வி இதழ் நிறுவனர் செல்வம், "ஆராய்ச்சி இதழ்களின் தொகுப்பாசிரியர்களின் எதிர்பார்ப்புகள்" என்ற தலைப்பில் பேசினார்.

மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகம், சார்ல்டன் காலேஜ் ஆப் பிசினஸ், மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதலின் பேராசிரியர் சத்ய பராய்தம், "கருத்தியல் மாதிரி மற்றும் தத்துவார்த்த பின்னணி" "கருதுகோள்கள் புத்தாக்கம் மற்றும் சோதனைப் படுத்தல்", "ஆய்வுக் கட்டுரைகளை ஸ்கோபஸ் பட்டியலில் உள்ளடக்கிய ஆராய்ச்சி இதழ்களில் வெளியிடுவதற்கான வடிவமைப்பு" என்ற தலைப்புகளில் பேசினார். மேலாண்மைப்பள்ளி இயக்குனர் பாபு, ஆராய்ச்சி இயக்குனர் முத்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**Cauvery Times, Tiruchirappalli,**
**Dated: 14-20.7.2023, Page No:4**



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை, பாரதிதாசன் மேலாண்மைப்பள்ளி, ஆராய்ச்சி இயக்ககம், மற்றும் SMART மேலாண்மைக் கல்வி இதழ் ஆகியவை இணைந்து சமூக அறிவியல் ஆராய்ச்சி நெறியாளர்களின் நன்மைக்காக, தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது எப்படி? மற்றும் ஸ்கோபஸ் பட்டியலில் உள்ளடக்கிய ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் எவ்வாறு வெளியிடுவது என்ற தலைப்பில் பன்னாட்டு இணைய வழி பயிலரங்கை நடத்தின. துறைத்தலைவர் முனைவர் செ.வனிதா வரவேற்றார். துணைவேந்தர் முனைவர் ம.செல்வம் தலைமை உரையாற்றினார். முதுமுனைவர் மு.செல்வம் ஆராய்ச்சி இதழ் தொகுப்பாசிரியர்களின் எதிர்பார்ப்புகள் என்ற தலைப்பில் பேசினார். முனைவர் சத்யபராய்தம், முனைவர் ம.பாபு, முனைவர் எஸ்.முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.